**செ.வெ.எண் : 377** **நாள் : 21/6/2007.**

**செய்தி வெளியீடு**

# தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர், உறுப்பினர்கள் நியமனம் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக பல்வேறு தொழிலாளர் நல வாரியங்கள் இந்த அரசினால் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, தையல் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாத்திடும் வகையில் 'தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்' ஒன்று ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை இவ்வாரியத்தின் தலைவராகவும்,

தொழிலாளர் ஆணையர், நிதித் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர், சமூகநலத் துறை இயக்குநர் ஆகியோரை அரசுப் பிரதிநிதிகளாகவும்,

சென்னை திரு.என். சுந்தரம், மதுரை திரு மா. மணிவண்ணன், சென்னை திரு ஏ.எம். மஸ்தான், விழுப்புரம் திரு. காசிலிங்கம், திருவண்ணாமலை திரு.கே.வி. மஞ்சுநாதன், திருச்சி திரு. ஜாஹீர் உசேன், வேலூர் திருமதி லட்சுமி ஆகியோரை வேலையளிப்போர் பிரதிநிதிகளாகவும்,

நாமக்கல் திரு வி.என்.குருசாமி, திண்டிவனம் திரு. ஏ. ஹரிதாஸ், நாகர்கோவில் திரு. கே. செல்லப்பன், திருப்பூர் திரு. கே. பாலாமணி, சென்னை திருமதி ஏ. லட்சுமி, வேலூர் திருமதி நிர்மலா ராசா ஆகியோரைத் தொழிலாளர் நலப் பிரிதிநிதிகளாகவும், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களாக நியமனம் செய்து முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**